# 4-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

**முன்னிலை : திரு.C.ராஜலிங்கம்.,பி.ஏ,பி.எல்.,**
**4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**உடுமலைப்பேட்டை**

2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 – ம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் சித்திரை திங்கள் 9–ம் நாள்

இடைக்கால மனு எண்.196/2022
in
முதலேற்பு வழக்கு எண்.111/2021

1.மைனர் M.H.ஹரீஷ்வா
( அவருக்காக அவரது அடுத்த சிநேகிதியும், தாயாருமான M.ஹர்ஷினி)
2. M.ஹர்ஷினி ........ மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

M.மோகன்குமார்
... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்னர் 18.03.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.பாலசுப்பிரமணியன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.தென்னரசு, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், ஆவணங்களை பரீசிலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழுங்கும்,

**உ த்தரவு**

எதிர்மனுதாரர், வழக்கின் விசாரணை முடியும் வரை மனுச் சொத்துக்களை எந்தவிதத்திலும், விற்கவோ, வில்லங்கப்படுத்தவோ கூடாதென அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழுங்கக்கேட்டு, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39, விதி 1 மற்றும் 2–ன் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

**2.1)** எதிர்மனுதாரர் மீது 1ம் மனுவாதிக்கு மனுச் சொத்துக்களில் பாகம்

கோரியும், ஜீவனாம்சம் கோரியும், மனுச் சொத்துக்களை எதிர்மனுதாரர் விற்கவோ, வில்லங்கப்படுத்தவோ கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், மனுதாரரால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரரின் தகப்பனார் முத்துச்சாமிக் கவுண்டருக்கு அவரது மனைவி அங்காத்தாள் என்பவர் மூலம் நாட்டுத்துரை, மோகன்குமார் (எதிர்மனுவாதி) என்ற இரண்டு ஆண் மக்களும், சுசீலா தேவி, தெய்வகுஞ்சரம் என்ற இரண்டு பெண் மக்களும் வாரிககள் ஆவர். மனுசொத்து A ஷெட்யூலில் கண்டுள்ள சொத்துக்கள் எதிர்மனுதாரரின் தகப்பனார் முத்துச்சாமிக்கவுண்டர், எதிர்மனுதாரரின் சகோதரர் நாட்டுத்துரை மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களுக்கிடையே 22.10.1990 தேதிய C–ஷெட்யூல் ஆக எதிர்மனுதாரருக்கு பாகம் பிரிந்த சொத்துக்களாகும். மனு B–ஷெட்யூல் சொத்துக்கள் எதிர்மனுவாதிக்கு அவரது தகப்பனார் முத்துச்சாமி கவுண்டர் ஏற்படுத்தி கொடுத்த 01.12.2006 தேதிய உயில் ஆவண படி பாத்தியப்பட்டது. மேற்படி எதிர்மனுதாரரின் தகப்பனார் முத்துச்சாமிக்கவுண்டர் மற்றும் அவரது மகன்களுக்கிடையே 22.10.1990 ம் தேதியன்று ஏற்பட்ட பாக ஆவணத்திற்குப் பிறகு முத்துச்சாமிக்கவுண்டர் அவரது பாகத்திற்குப் பிரிந்த சொத்துக்கள் சிலவற்றை அவரது 2 வது மகனான எதிர்மனுதாரருக்கு உயில் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்து விட்டு 17.02.2016–ம் தேதியன்று காலஞ்சென்றுவிட்டார். மேற்படி சொத்துக்களை எதிர்மனுதாரரும், வாதிகளும் கூட்டுக்குடும்ப உறுப்பினர்களாக இருந்து சொத்துக்களையும் எதிர்மனுதாரரின் பாகச் சொத்துக்களையும் பொதுவாக அனுபவித்து வந்துள்ளார்கள்.

**2.2)** 2–ம் மனுதாரருக்கும், எதிர்மனுவாதிக்குமிடையே 25.03.2012–ம் தேதியன்று காங்கேயம், காடையூர், காடையீஸ்வரர் கோயிலில் வைத்து இரு இல்ல பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றபோது, 80 பவுன் தங்க நகைகளும், பண்ட பாத்திரங்களும், சீர்வரிசைகளும் கொடுத்து, எதிர்மனுதாரருக்கும் 4 பவுனில் தங்கச் செயினும், மோதிரமும் போட்டிருந்தார். மேலும் தலை நோன்புக்கும் எதிர்மனுவாதிக்கு 3 ¾ பவுனில் ஒரு செயினும் போடப்பட்டது. திருமணச் சமயத்தில் எதிர்மனுவாதி B.Sc., பட்டப்படிப்பு முடித்து,

உடுமலைப்பேட்டையில் மாருதி விண்டு ஃபார்ம் என்னும் நிறுவனத்தை நடத்தி வருவதாகவும், பொள்ளாச்சியில் கிளை இருப்பதாகவும், பணத்தம்பட்டியிலும், பொள்ளாச்சியிலும் 40 ஏக்கர் தென்னந்தோப்பு இருப்பதாகவும், நாகர்கோவிலில் எதிர்மனுவாதி பெயரில் 2 காற்றாலைகள் இருப்பதாகவும் கூறியுள்ளார். திருமணத்திற்குப் பிறகு 2-ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும், எதிர்மனுவாதியின் பெற்றோர்களுடன் பணத்தம்பட்டியில் கூட்டுக்குடும்பமாக குடும்பம் நடத்திய சமயத்தில் தான் எதிர்மனுதாரருக்கு எந்தவித நிரந்தர வேலையும், நிரந்தர வருமானமும் இல்லை என்ற விபரம் தெரியவந்துள்ளது. எதிர்மனுதாரருக்கு 40 ஏக்கர் தோப்போ, காற்றாலைகளோ இல்லை. இது குறித்து மனுதாரர், எதிர்மனுதாரரிடம் கேட்டதற்கு எதிர்மனுதாரர் பொய்கூறித்தான் திருமணம் செய்ததாகவும், ஒழுங்காக குடும்பம் நடத்துமாறும் 2-ம் மனுதாரரை மிரட்டியுள்ளார். அச்சமயத்தில் 2-ம் மனுதாரர் கர்ப்பமுற்றதன் காரணமாக 1-ம் மனுதாரரின் தாயார் 2-ம் மனுதாரரின் நலனுக்காக கோவையிலிருந்து உடுமலைப்பேட்டை, ஸ்ரீராம் நகரில் வாடகைக்கு வீடு எடுத்து, அடிக்கடி பணத்தம்பட்டி வந்து, கவனித்துள்ளார். எதிர்மனுதாரரும், 2-ம் மனுதாரரும் உடுமலைப்பேட்டையிலுள்ள 2-ம் மனுதாரரின் தாயார் வீட்டிற்கு வந்து குடித்தனம் நடத்தியுள்ளார்கள்.

**2.3)** குடும்ப வாழ்க்கையின் பயனாக 2-ம் மனுதாரருக்கு 29.12.2012 ம் தேதியன்று 1-ம் மனுதாரர் ஹரீஷ்வா பிறந்துள்ளார். பிரசவ செலவுகள் முழுவதையும் 2-ம் மனுதாரரின் தாயார் ஏற்றுக் கொண்டு, எதிர்மனுதாரர் எந்த வேலையும் பார்க்காமலும், மனுதாரருக்கு வேண்டிய அன்றாட அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யாமலும் இருந்து வந்ததால், இதுகுறித்து எதிர்மனுதாரரிடம் கேட்டதற்கு எதிர்மனுதாரர் கோபப்பட்டு அடித்துள்ளார். அதை தடுக்க வந்த 2-ம் மனுதாரரின் தாயாரையும் எதிர்மனுதாரர் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். இந்நிலையில் எதிர்மனுதாரர் புதிதாக தொழில் தொடங்கப் போவதாகவும், அதற்கு முதலீடு செய்ய பணம் தேவைப்படுவதாகவும் கூறி 2-ம் மனுதாரரிடமிருந்து 80 பவுன் நகைகளில் 22 பவுன் நகைகளை வாங்கி உடுமலைப்பேட்டை பாரத ஸ்டேட் வங்கியில் அடமானம் வைத்து, அதைக்

கொண்டு எதிர்மனுதாரர் பெயரில் FORD FIESTA காரினை வாங்கியுள்ளார். பின்னிட்டு மீண்டும் தனக்கு தொழில் செய்ய தொகை போதவில்லை எனக் கூறி மனுதாரரிடமிருந்து 24 பவுன் நகைகளை வாங்கிச் சென்று அவரது தாயார் அங்காத்தாள் பெயரில் துங்காவி பாரத ஸ்டேட் வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார். அதையும், எந்தவித சரியான தொழில் முதலீட்டுக்கும் பயன்படுத்தாமல் செலவு செய்துள்ளார். பின்னிட்டு தனது சகோதரி சுசீலாதேவியின் மகன் கார்த்தி என்பவரின் பூமிகளுக்குள் பூளவாடியில் நடத்தி வந்த காயர் தொழிற்சாலைக்கு முதலிட்டுக்காக பணம் தேவை எனச் கூறி 2-ம் மனுதாரரிடம் மீண்டும் நகைகளை கேட்டு வந்ததில், அவரிடத்தில் நகைகள் இல்லாததால், 2-ம் மனுதாரரின் தாயார் சித்ரகலா பெயரில் உடுமலைப்பேட்டை கனரா வங்கியில் அவரது நகைகளை அடமானம் வைத்து, தொகை பெற்று, காயர் தொழிற்சாலை ஆரம்பித்து அதையும் சரிவர கவனிக்காததால், தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு நகைகளுக்கு உரிய அசல் வட்டிகளை செலுத்தாததால் நகைகளும் பாரத ஸ்டேட் வங்கியால் ஏலத்தில் விடப்பட்டது. மேலும் காயர் தொழிற்சாலைக்குரிய மின் கட்டணத்தை செலுத்தாததால் மின்சார வாரியத்தினர் அதன் மின் இணைப்பை துண்டிக்க வந்த நிலையில், அதை தடுத்து நிறுத்துவதற்காக 2-ம் மனுதாரரின் தாயாரிடமிருந்து மீண்டும் நகைகளை வாங்கிச் சென்று எதிர்மனுதாரரின் பெயரில் உடுமலைப்பேட்டை விஜயா வங்கியிலும், மனுதாரரின் பெயரிலும் உடுமலைப்பேட்டை UCO வங்கியிலும் கடன் பெற்று மின் கட்டணத்தை செலுத்தியுள்ளார். கணபதிபாளையத்தில் வாடகைக்கு இடம் பிடித்து பிளாஸ்டிக் யூனிட் போடப் போவதாக கூறி அதற்கு முதலீட்டிற்காக உடுமலைப்பேட்டை தீயணைப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள பாலாஜி திருமண மண்டபத்தின் உரிமையாளன் ராகேஷ் என்பவரிடம் பலமுறை கடன் பெற்றதில், அவருக்கு ரூ.30 லட்சம் திருப்பிச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்தக் கடனையும் திருப்பிச் செலுத்த இயலாததால், எதிர்மனுதாரர் மனுதாரரை மிரட்டி தகாத வார்த்தைகளால் பேசியும், 2-ம் மனுதாரர் பெயரில் கரூரில் NH-7 ல் இருந்த வீட்டு மனையிடத்தை செட்டில்மெண்ட் செய்து கொடுத்திருந்ததை விற்று கடனை திருப்பிச் செலுத்தியுள்ளார்.

**2.4)** எதிர்மனுதாரர் தொடர்ந்து மனுதாரர்களுக்கு எந்தவித உணவுப் பொருட்களும் வாங்கிக் கொடுக்காமலும், வீட்டையும் கவனிக்காமலும் இருந்து வந்ததால், வேறு வழியின்றி அன்றாட தேவைக்காக 2–ம் மனுதாரர் உடுமலைப்பேட்டை சீனிவாசா மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியைப் பணிக்குச் சென்றுள்ளார். 2018–ம் ஆண்டு முதல் ஒரு வருட காலம் பணிபுரிந்த எதிர்மனுதாரர் 2–ம் மனுதாரரின் மாதச் சம்பளத்தையும் பிடிங்கிக் கொண்டு, தகாத வார்த்தைகளால் திட்டியும், அடித்தும் அடிக்கடி தொடர்ந்து தகராறுகள் செய்து வந்ததன் காரணமாக நான் பள்ளிக்கு உரிய நேரத்திற்கு செல்ல இயலாமல் அடிக்கடி விடுப்பு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் பள்ளி நிர்வாகத்தினர் 2–ம் மனுதாரரை பணியிலிருந்து நீக்கி விட்டனர். இது சம்பந்தமாக பலமுறை மனுதாரர் எதிர்மனுதாரரின் சகோதரர் முறையான பணத்தம்பட்டி தங்கராஜ் என்பவர் மூலமும், இராவணாபுரத்தைச் சேர்ந்த எனது மாமா முறையான மனோகரர் என்பவர் மூலமும், 2–ம் மனுதாரரின் தாய்மாமன் மனைவி ராசு என்பவர் மூலமும் எதிர்மனுதாரரிடம் எடுத்துக் கூறியதில் எதிர்மனுதாரர் ஒரு மாதம் மட்டுமே தங்கியுள்ளார். 18.02.2020 அன்று எதிர்மனுதாரர், 2–ம் மனுதாரருடன் சண்டையிட்டு அநாதரவு செய்து விட்டு, ஒரு வருட காலமாக பிரிந்து சென்று ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். 2–ம் மனுதாரரின் தாயார்தான் மனுதாரருக்கு அன்றாட தேவைகளுக்கு உதவி புரிந்து வந்துள்ளார். வீட்டு வாடகையை கொடுக்க இயலாமலும், கொரானா காலத்தில் திடீரென்று உடல்நிலை சரியில்லாமல் போன 1–ம் மனுதாரரை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்க போதிய பணமின்றியும் எதிர்மனுதாரரால் அடமானம் வைக்கப்பட்ட நகைகளை மீட்க இயலாமலும் நான் மிகுந்த சிரமங்களுக்கு ஆட்பட்டுள்ளார். எனவே இது சம்மந்தமாக மீண்டும் மேலே சொன்ன நபர்கள் மூலமும், முருங்கப்பட்டி தம்பு நாயக்கர் மற்றும் எதிர்மனுவாதியின் மாமா மகன் குமார் ஆகியோர் மூலமும் பைசல் பேசியதில், நகைகளுக்கு வட்டி கட்டுவதற்காக மட்டும் 02.11.2020 அன்று UCO வங்கி கணக்கிற்கு ரூ.22,000/– மட்டும் எதிர்மனுதாரர் அனுப்பியுள்ளார்.

**2.5)** தற்சமயம் 1–ம் மனுதாரர் உடுமலைப்பேட்டையில் சாந்தி மாண்டிசோரி

பள்ளியில் 3–ம் வகுப்பு படித்து வருகிறார். அவரது படிப்பு, மற்றும் அன்றாட தேவைகளுக்கும் 2–ம் மனுதாரர் பல வெளிநபர்களிடம் கடன் பெற்று படிக்க வைத்து வருகிறார். மனு சொத்துக்களில் மைனர் 1–ம் வாதிக்கு பொதுவில் சரிபாதி பாத்தியமும், உரிமையும் உள்ளது. எனவே மேற்படி சொத்துக்களில் 1–ம் மனுவாதிக்குரிய பங்கு பாகத்தை பிரித்துக் கொடுக்குமாறும், மனுதாரர்களுக்கு மாதாமாதம் தலா ரூ.10,000/– வீதம் ஜீவனாம்சம் கொடுக்குமாறும் எதிர்மனுதாரரிடம் பலமுறை மேற்சொன்ன நபர்கள் மூலம் எதிர்மனுதாரரை கேட்டு வந்தும், எதிர்மனுதாரர் எந்தவித காரணமும் தெரிவிக்காமலும், பாகத்தைப் பிரித்துக் கொடுக்க முன்வராமலும், ஜீவனாம்சம் செலுத்தாமலும் இருந்து வருகிறார். மேற்படி சொத்துக்களையும், வேறு நபர்களுக்கு ஈன விலைக்கு விற்று விடவும், அதன் மூலம் 1–ம் மனுதாரருக்குரிய பங்கு பாகத்தை கிடைக்க விடாமல் மனுச் சொத்துக்களை விற்பனை செய்ய நேரிட்டால் 1ம் மனுதாரருக்கு மனுச் சொத்துக்களில் உள்ள பாகத்தை பெற இயலாமல், பணத்தாலும், பொருளாலும் ஈடுகட்ட முடியாத இழப்புகளை ஏற்படுத்தி விடும். எனவே, அசல் வழக்கின் விசாரணை முடியும்வரை மனுச் சொத்துக்களை எந்தவிதத்திலும், விற்கவோ, வில்லங்கப்படுத்தவோ கூடாதென ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமும், இம்மனு மீதான விசாரணை முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரமும் வழங்கக் கேட்டு மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர் /பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்:</u>**

**3.1)** மனுவாதிகளின் மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். எதிர்மனுதாரர் பொள்ளாச்சி தாலூக்கா தொண்டாமுத்தூரில் விண்ட் பார்ம் அமைக்கும் வேலை செய்து கொண்டிருந்த போது தங்கவேல் என்பவர் மூலமாக கோவை சாய்பாபா காலனியில் உள்ள பெண்ணை பற்றி கூறினார். அதை வைத்து தொண்டாமுத்தூர் கவுண்டப்பனூரில் உள்ள தாட்சாயினி கோயிலில் வைத்து 2–ம்

மனுதாரரை பார்க்கப்பட்டது. மேற்படி கோயிலுக்கு 2–ம் மனுதாரரும், அவரது தாயாரும் 6 மாத காலமாக வந்து கொண்டிருப்பதாக கூறியுள்ளார். கோவிலில் பெண் பார்த்த போது ஆசிர்வாதம் செய்த பெண் சாமியார் சாமியின் கழுத்திலிருந்த மஞ்சள் கயிற்றை எடுத்து 2–ம் மனுதாரரின் கழுத்தில் போடும்படி கூறியுள்ளார். அதன்படி எதிர்மனுதாரரும் செய்துள்ளார். அப்போது 2–ம் மனுதாரரும், அவரது தாயாரும் சேர்ந்து கொண்டு 2–ம் மனுதாரருக்கு ஒரு சகோதரியும், சகோதரனும் இருப்பதாகவும் அவர்களுக்கு திருமணமாகி விட்டது என்றும் அவர்களுடன் பாகப் பிரச்சனை ஏற்பட்டு தங்களுக்கு ஒரு கோடி வந்துள்ளதாகவும் கரூரில் இரண்டு வீடுகளும், கோவையில் ஒரு அப்பார்ட்மெண்ட் வீடு உள்ளதாகவும் 2–ம் மனுதாரர் B.Sc., MFT., படிப்பு படித்து விட்டு நியூஸிலாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் வேலை செய்து ரூபாய் 50,00,000/–க்கு மேல்சம்பாதித்து வைத்திருப்பதாகவும் 100 பவுன் தங்க நகையும், 20 கிலோவெள்ளி பொருட்களும் வைத்திருப்பதாக கூறியுள்ளார்கள். திருமணத்திற்கு உண்டான ஜவுளி எடுத்தது முதல் திருமணம் நடக்கும் வரை உண்டான செலவு ரூபாய் 10,00,000/–ஐ பிரதிவாதியையே செய்யும்படி கூறியதால் எதிர்மனுதாரரும் செலவு செய்துள்ளார். பின்னிட்டு 25–03–2012–ம் தேதியில் காங்கேயம் காடையூர் என்ற கிராமத்தில் உள்ள காடையீஸ்வரர் கோயிலில் வைத்து இருவருக்கும் திருமணம் நடைபெற்று, இருவரும் எதிர்மனுதாரரின் ஊரில் இருந்து குடும்பம் நடத்த ஆரம்பித்தனர்.

**3.2)** திருமணம் முடிந்து 4 நாட்கள் கழித்து 2–ம் மனுதாரரும் அவரது தாயாரும் சேர்ந்து கொண்டு தாங்கள் சொன்னது போல எதுவும் இல்லை என்றும் தங்கள் வசம் இருந்த சுமார் 80 பவுன் தங்க நகைகளை உறவினர் செல்வியிடம் கொடுத்து அடமானத்தில் உள்ளதாகவும், அதை மீட்டு தரும்படியும் கேட்டுள்ளனர். எதிர்மனுதாரர் வேறு வழியில்லாமல் ரூபாய் 5,00,000/–ம் கொடுத்து வங்கியில் இருந்த நகைகளை மீட்டு கொடுத்துள்ளார். இருவரும் குடும்பம் நடத்தியதில் 9.2.2012 அன்று 1ம் மனுதாரர் பிறந்து, ஹரிஷ்வா என பெயரிடப்பட்டு தற்போது சுமார் 9 வயதாகிறது. 2–ம் மனுதாரரும், அவரது தாயாரும் சேர்ந்து கொண்டு எதிர்மனுதாரருடன் வீண் தகராறு செய்து உடுமலைப்பேட்டை ஸ்ரீராம் நகரிலும் பின்னிட்டு காந்தி நகரிலும் தனிக்குடித்தனம் செய்து வந்தனர். எதிர்மனுதாரர்

காலையில் தோட்டத்திற்கு சென்று விட்டு இரவு வீடு திரும்புவது வழக்கம். திடீரென ஒருநாள் வந்த போது புதிய நபர் ஒருவர் வீட்டில் இருந்தார். அவரைப் பற்றி விசாரித்த போது 2-ம் மனுதாரரின் அக்கா கணவர் என்றும் அவருடன் கரூர் செல்லப் போவதாகவும் கூறியுள்ளார்கள். அதற்கு எதிர்மனுதாரர் ஒப்புக் கொள்ள மறுத்ததால் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னிட்டு எதிர்மனுதாரர், 2ம் மனுதாரருடன் மட்டும் சேர்ந்து வாழலாம் என்று கூறியதை ஏற்கவில்லை. அதற்காக முருங்கப்பட்டி ராஜேந்திரன், ராவணாபுரம் மனோகர்., இருதரப்பு பெரியவர்களை வைத்து பைசல் பேசிய போது 2ம் மனுதாரரும் அவரது தாயாரும் பொய் விபரம் சொல்லி வரதட்சனை கேட்டு மிரட்டியதாக கேஸ் கொடுக்க போவதாக கூறினார்கள். அத்துடன் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 2-ம் மனுதாரரின் பெயருக்கு எழுதி கொடுக்க வேண்டும் என்றும் மிரட்டியுள்ளார்கள். 2ம் மனுதாரரும், அவரது தாயாரும்சேர்ந்து கொண்டு தாங்கள் ராஜ பரம்பரை என்றும் ஆடம்பரமாக வாழ வேண்டும் என்றும் தொழில் செய்ய சொத்துக்களை அடமானம் வைத்து, பெற்று கொடுக்கும் படி எதிர்மனுதாரருடன் வீண் தகராறு செய்துள்ளனர். வேறு வழியில்லாத எதிர்மனுதாரரின் சொத்துக்களை அடமானம் வைத்து கோவை ஆக்ஸிஸ் வங்கியில் ரூபாய் 40,00,000/- (ரூபாய் நாற்பது லட்சம் )மும் உடுமலைப்பேட்டை யூகோ வங்கியில் ரூபாய் 20,00,000/-மும் கடன் பெற்று 2ம் மனுதாரரிடமும், அவரது தாயாரிடமும் கொடுத்துள்ளார். பணத்தை பெற்றுக் கொண்டு, அவர்களது விருப்பம் போல் செலவு செய்தார்கள். 2-ம் மனுதாரரின் செயலால் எதிர்மனுதாரர் வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியாமல் இருந்து வந்துள்ளார்.

**3.3)** எதிர்மனுதாரரின் தாயாருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் அவரை கூட்டிக் கொண்டு வந்து வீட்டில் வைத்திருந்தார். 2ம் மனுதாரரும், அவரது தாயாரும் செய்த கொடுமையின் காரணமாக அவர் திரும்பவும் கிராமத்திற்கே சென்று விட்டார். எதிர்மனுதாரர், 2ம் மனுதாரருக்கு செய்து போட்டிருந்த தாலி கொடியை விட்டு விட்டு மீதியுள்ள நகைகளை திரும்பவும் அடமானம் வைத்து விட்டனர். அது பற்றி எதிர்மனுதாரர் கேட்ட போது 2ம் மனுவாதியும் அவரது தாயாரும் வீண் ரகளை செய்து கேவலமாக பேசி

கொடுமைப்படுத்தி வந்துள்ளனர். எதிர்மனுதாரரின் மகனை உடுமலைப்பேட்டை சாந்தி மாண்டிச்சேரி பள்ளியில் சேர்த்து படிக்க வைத்துள்ளார். வீட்டு வேலை செய்ய மூன்று ஆட்களை நியமித்தும், 2ம் மனுதாரர் வேலைக்கு செல்வதாக சொல்லி ஸ்ரீனிவாசா பள்ளியில் ஆசிரியராக சேர்த்து விட்டு, தனியாக இருந்த தாயாரின் வீட்டிற்கு சென்று இருந்து கொண்டு சரியாக வேலைக்கு செல்லாத காரணத்தால் 2ம் மனுதாரரை பள்ளி நிர்வாகம் வேலையில் இருந்து நீக்கி விட்டது. அதன் பிறகு 2ம் மனுவாதியும் அவரது தாயாரும் சேர்ந்து கொண்டு எதிர்மனுதாரரின் பேரில் இருந்த சொத்துக்களை எழுதிக் கொடுத்தால் மட்டுமே சேர்ந்து வாழ முடியும், இல்லை என்றால் சேர்ந்து வாழ முடியாதென்று கூறி தகராறு செய்துள்ளனர். முருங்கப்பட்டி ராஜேந்திரன், உறவினர் குமார் சகோதரர் தங்கராஜ் மற்றும் உறவினர்களை வைத்து பைசல் பேசியும் சொத்துக்களை எழுதி கொடுத்தால் மட்டுமே சேர்ந்து வாழ்வதாக சொல்லியதுடன் குழந்தையை பார்க்க கூடாது என்று கூறி தகராறு செய்துள்ளனர். அத்துடன் 1 கோடி ரூபாய் நகையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டனர். எதிர்மனுதாரரின் அனுமதியில்லாமல் குழந்தையை வேறு பள்ளியில் சேர்த்துள்ளார்கள்.

**3.4)** எதிர்மனுதாரரின் குழந்தையை பார்க்க வேண்டும் என்றும் சேர்ந்து வாழலாம் என்றும் கூறியதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சொத்துக்களை எழுதி வாங்குவதிலேயே குறியாக இருந்துள்ளார். அதற்கு இந்த எதிர்மனுதாரர் ஒப்புக் கொள்ளாத காரணத்தால் பொய் விபரங்களை சொல்லி பாக வழக்கும் ஜீவனாம்ச வழக்கும் தாக்கல் செய்துள்ளார். 2ம் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாது என்று சொல்லி தன்னிச்சையாக வாழ்ந்து வருகிறார். அதனால் சேர்ந்து வாழ கேட்டு இந்த எதிர்மனுதாரர் உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் HMOP மனு தாக்கல் செய்துள்ளார். தாவா "A"ஷெட்யூல் சொத்துக்கள் இந்த எதிர்மனுதாரருக்கு அவரது குடும்பத்தாருடன் 22-10-1990-ம் தேதியில் செய்து கொண்ட பாகப் பத்திரத்தின்படி பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி பத்திரத்தில் எதிர்மனுதாரரின் பாட்டனாரான சுப்பைய கவுண்டருக்கு 16-06-1961-ம் தேதிய பாக சாசனத்தின்படி சொத்துக்கள் பாத்தியப்பட்டதாகவும் அவர் கலமான பிறகு அந்த சொத்துக்களை பொறுத்து

எதிர்மனுவாதியும் அவரது குடும்பத்தாரும் பாகம் செய்து கொண்டதாகவும் மேற்படி பாகப்பத்திரத்தின்படி இந்த எதிர்மனுதாரருக்கு "C" செட்யூல் சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே இந்த எதிர்மனுவாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பாகம் செய்து கொண்டுள்ளதால் தாவா சொத்துக்களில் 1ம் மனுதாரருக்கு பங்கு பாத்தியம் எதுவும் ஏற்படுவதில்லை.

**3.5)** 01-12-2006-ம் தேதியில் ஏற்பட்ட உயில் சாசனத்தின் படி அயிட்டம் 2 சொத்துக்கள் இந்த எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டதாகும். இந்த எதிர்மனுதாரரின் தகப்பனார் முத்துச்சாமி கவுண்டர் எழுதி வைத்த உயிலை மனுதாரர்கள் பிராதிலேயே ஒப்புக் கொண்டுள்ளனர். மேற்படி உயில் சாசனத்தின்படி முத்துச்சாமி கவுண்டர் என்பவருக்கு 22-10-1990ம் தேதியில் ஏற்பட்ட பாக சாசனத்தின்படி பாத்தியப்பட்ட "A" செட்யூல் சொத்துக்களையும் 11-03-2002ம் தேதியில் பாக பாத்திய விடுதலை ஆவணத்தின்படி பாத்தியப்பட்ட சொத்துக்களையும் இரண்டாவது மகனான எதிர்மனுதாரர் மோகன்குமார் என்பவருக்கு சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் அடைந்து கொள்ள வேண்டியது என்று உயில் எழுதி வைத்துள்ளதால் அந்த சொத்துக்களில் மைனர் மனுதாரருக்கு பங்கு பாத்தியம் கேட்க முடியாது. பாத்தியமும், உரிமையும், சுவாதீனமும் இல்லாத சொத்துக்களை பொறுத்து சொத்து மதிப்பை குறைத்து காட்டி பாகம் கோரியிருப்பது ஏற்புடையதல்ல. எதிர்மனுதாரர் வங்கி மூலமும் மற்றும் பொள்ளாச்சி ஜனார்த்தனிடம் பெற்ற ரூபாய் 5,00,000/-ம் நல்லாம்பள்ளி குமார் என்பவரிடம் பெற்ற கடன் தொகை ரூபாய் 10,00,000/-ம் பற்றி தாவாவில் குறிப்பிடவில்லை. இந்த எதிர்மனுதாரர் தனி நபர்களிடம் கடன்களை பெற்று பூமியை வளப்படுத்தி வைத்துள்ளார். எந்த வகையிலாவது எதிர்மனுதாரரை நிம்மதியாக இருக்க விட கூடாது என்றும் சொத்துக்களை அபகரித்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் பாகம் மற்றும் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர், மனுதாரர்களுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார். எதிர்மனுதாரர் தொழிலிலும் விவசாயத்திலும் நஷ்டம் ஏற்பட்டு மிகவும் சிரமமான சூழ்நிலையில் இருந்து வருகிறார். வயதான தனது தாயாரை வைத்துக் கொண்டு சாப்பாடு செய்து கொடுக்க முடியாமலும் விவசாயத்தை கவனிக்க

முடியாமலும் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார். எனவே, எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதைக் காண்பதேயாகும்.

**5. தீர்வு:-**

இருதரப்பு வாதுரைகளையும் கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, மனுதாரர் தரப்பில் வாதிடும்போது மனு A அட்டவணை சொத்து எதிர்மனுதாரரின் தந்தை முத்துசாமி கவுண்டர் மற்றும் அவரது மகன்களுக்கிடையே ஏற்பட்ட 22.10.1990-ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் படி C அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது. அதைபோல தாவா பி அட்டவணை சொத்தை எதிர்மனுதாரருக்கு உயில் மூலம் அவருடைய தந்தை பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றும் 17.02.2016-ல் அவருடைய தந்தை காலமாகிவிட்டதால் உயில் நடைமுறைக்கு வந்துள்ளாகவும், மேற்படி சொத்து எதிர்மனுதாரருக்கு பூர்வீக சொத்து என்பதால் 1-ம் மனுதாரருக்கு பாகம் உள்ளது என்றும், 1-ம் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு 2-ம் மனுதாரருடன் 25.03.2012 தேதியிட்ட திருமண உறவின் மூலமாக பிறந்தவர் என்றும் பூர்வீக சொத்து என்பதால் 1-ம் மனுதாரருக்குரிய பாகம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் தற்போது வழக்கு சொத்தை வில்லங்கப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் எதிர்மனுதாரர் தொடர்ந்து செயல்படுவதாகவும், அவ்வாறு வில்லங்கம் ஏற்படுத்தும் நிலையில் வழக்கு பரிகாரம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படும் என்றும் எனவே வழக்கு முடியும் வரை எந்த வில்லங்கமும் செய்யக்கூடாது என்று பரிகாரம் வழங்குவது அவசியம் என்று வாதிடப்பட்டது.

**6.** எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடும்போது, மனுதாரர் கூறியுள்ளது போல 2-ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்று அந்த திருமண உறவின் காரணமாக தான் 1-ம் மனுதாரர் பிறந்ததாக கூறியுள்ளதும் வழக்கு சொத்துக்கள் பாக பத்திரம் மற்றும் உயில் ஆவணம் மூலம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டதாக கூறுவதும் உண்மை தான் என்றும்

ஆனால் மேற்படி சொத்துக்கள் எதிர்மனுதாரருக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றும் அது பூர்வீக சொத்து அல்ல என்றும் பூர்வீக சொத்து இல்லை என்பதால் 1–ம் மனுதாரருக்கு எந்த பங்குரிமையும் கிடையாது என்றும் மேலும் வழக்கு சொத்தை விற்க எண்ணுவதாக கூறுவது உண்மையல்ல என்றும் எந்த அடிப்படை முகாந்தரமுமின்றி இந்த மனு தாக்கல் செய்துள்ளதால், மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதிடப்பட்டது.

**7.** இருதரப்பு வாதுரைகளையும் பார்க்கும்போது எதிர்மனுதாரர் 1–ம் மனுதாரரின் தந்தை என்பதும் எதிர்மனுதாரர் மற்றும் 2–ம் மனுதாரருக்கிடையே 25.03.2012 தேதியில் நடந்த திருமண உறவின் காரணமாக 1–ம் மனுதாரர் பிறந்துள்ளதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. மேலும், வழக்கு சொத்துக்கள் தொடர்பாக மனுதாரர்கள் தரப்பில் அவை பூர்வீக சொத்துக்கள் என்றும் அதற்கு மாறாக எதிர்மனுதாரர் தரப்பில், அது எதிர்மனுதாரருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்து என்று கூறுவதை பொறுத்து 22.10.1990 தேதியிட்டு முத்துசாமி கவுண்டர் மற்றும் அவருடைய மகன்களான எதிர்மனுதாரர் மற்றும் அவருடைய சகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் சொத்துக்கள் தொடர்பாக அவை பொதுவாக பாத்தியப்பட்டதாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தாவா பி அட்டவணை சொத்து தொடர்பாக 01.12.2006–ம் தேதியிட்டமுத்துசாமி கவுண்டர் எழுதி வைத்த உயில் ஆவணத்தின் சான்று நகல் காணப்படுகிறது. அதிலும் மேற்படி சொத்து 22.10.1990 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் மற்றும் அதற்கு பின்னர் ஏற்பட்ட பாகபாத்திய விடுதலை ஆவணப்படி பாத்தியப்பட்டதாக காணப்படுகிறது. இதன்படி பார்க்கும்போது முதல் தோற்ற முறையில் அந்த சொத்துக்கள் முத்துசாமி கவுண்டருக்கு தனித்து பாத்தியப்பட்டு அவர் தன் மகளுடன் பாகப்பிரிவினை செய்து கொண்டதாக உறுதியாக காணப்படாதநிலையில் சொத்தின் தன்மை குறித்து அசல் வழக்கின் விசாரணை முடிவில் தான் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து தீர்மானிக்கமுடியும் என்பதாலும், தற்போதைய நிலையில் சொத்துக்களை எதிர்மனுதாரர் விற்பனை செய்ய முயல்வதாகவும், அவ்வாறு விற்பனை செய்யப்பட்டால் வழக்கு பரிகாரம்

தொடர்பாக காலதாமதம் மற்றும் 3–ம் தரப்பினர் வழக்குகளை தவிர்க்கும் நோக்கத்தில் சொத்தை வழக்கு முடியும் வரை விற்கவோ, வில்லங்கப்படுத்தவோ கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கலாம் என்றும் ஆதனால் எதிர்மனுதாரருக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்பதோடு முதல்தோற்ற நிலை, சமச்சீர் வழக்கு மற்றும் பரிகாரம் வழங்கப்படாவிட்டால் ஏற்படும் பாதிப்பு மனுதாரருக்கு அதிகம் என்பதை கருத்தில்கொண்டு இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,** மனு அனுமதிக்கப்பட்டு, எதிர்மனுதாரர், வழக்கு முடியும் வரை மனுச் சொத்துக்களை எந்தவிதத்திலும், விற்கவோ, வில்லங்கப்படுத்தவோ கூடாதென இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C RAJALINGOM
Digitally signed by C RAJALINGOM
Date: 2025.04.22 19:24:26 +0530

4–வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

<u>**மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு ஆவணங்கள்:– இல்லை**</u>

C RAJALINGOM
Digitally signed by C RAJALINGOM
Date: 2025.04.22 19:24:34 +0530

4–வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

FAIR/DRAFT ORDER
In
IA.No.196/2022
in
OS.111/2021
Date: 22.04.2025
IV$^{th}$ ADJ Udt